**OS. 63/2022**

**நாள். 29.01.2026.**

**வா.சா.2 – அழகர்சாமி, த/பெ.ஆறுமுகம்**

<u>1, 2 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

ஆதிசிதம்பரகுருக்களை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ஆதிசிதம்பரகுருக்கள் லெட்சுமி அம்மாளுக்கு உயில் எழுதி வைத்தபோது எனக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 5 வயது இருக்கும். ஆதிசிதம்பர குருக்களை எனக்கு எப்படி தெரியும் என்றால் என் தகப்பனார் அவர்கள் விவசாய நிலங்களை பராமரித்து வந்தததால் நாங்கள் அவர் வீட்டில் இருந்ததால் தெரியும். தாவா சொத்தான நந்தவனத்தை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தான நந்தவனம் தற்போது எப்படி, எந்தநிலையில் உள்ளது என்றால் அழிந்தநிலையில் சில செடிகளுடன் உள்ளது. தாவா சொத்தான நந்தவனத்தில் உள்ள வீட்டில் யார் குடியிருந்தார்கள் என்றால் ஆதிசிதம்பர குருக்கள் குடியிருந்தார்கள். தாவா சொத்தான நந்தவனத்தை சுற்றி காம்பவுண்டு சுவர் உள்ளதா என்றால் உள்ளது, அழிமானநிலையில் உள்ளது. நான் சொல்வதுபோல் தாவா சொத்தான நந்தவனத்தில் உள்ள வீட்டில் ஆதிசிதம்பர குருக்கள் குடியிருக்கவில்லை என்றும், லெட்சுமியம்மாள் எழுதிவைத்த உயில் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.